__நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு__

__**CC No. 845/2022**__

அ.சா.2– தர்ஷினி.க த/பெ காத்தமுத்து நாள்–14.10.2025

எதிரி ஆஜர்

குறுக்கு விசாரணை –

நான் சம்பவ காலத்தில் ஆர்க்கிடெக்காக பணிபுரிந்தேனா என்றால் சரிதான். மனோகரன் வீட்டிற்கு நான் சென்றுவரும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். எனக்கும் என் கணவர்க்கும் அடிக்கடி குடும்பபிரச்சனை காரணமாக பிரச்சனை வரும் என்றால் சரியல்ல. என்னை இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள இரண்டாவது மின்னஞ்சலை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் அந்த விவரத்தை சொன்னேன் மெயிலை கொடுத்தேனா என்று ஞாபகமில்லை. மனோகரன் என் தலைமை அதிகாரி என்றால் சரிதான். நான் மனோகரனிடம் இருக்கும் நட்பு காரணமாக என்னுடன் பணிபுரியும் நபர்களிடம் தலை கணமாக செயல்படுவேன் என்றாலும் அதனால் பலநபர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் ஆன்லைன் புகார் ஒன்றை 29.04.2022 அன்று கொடுத்துள்ளதாகவும் அது சம்பந்தமாக விசாரணை செய்து உள்ளீர்கள் என்றும் போலிசாரிடம் கூறினேனா என்றால் ஆன்லைன் புகார் கொடுத்ததை பற்றி கூறியுள்ளேன். பல்வேறு சமயத்தில் எடுக்கப்பட்ட குரூப் போட்டோவிலிருந்து கிராப் செய்யப்பட்ட என்னுடைய மற்றும் மனோகரன் என்பவருடைய புகைப்படத்தை ஒன்றாக சேர்த்து என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

*"victormanoharan24@gmail.com என்பது மனோகரனின் மெயில் ஐடி கிடையாது அது எப்படி எனக்கு தெரியுமென்றால் அவசர தேவைக்கு அவருடைய தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு நான் மெயில் அனுப்புவேன். அந்த வகையில் அவருடைய மெயில் ஐடி nalinmerlin@gmail.com என்று எனக்கு தெரியும். அன்றைய தினம் இரவு எனது கணவர் உறங்கி கொண்டிருந்தார் எனக்கு யாரிடம் சொல்வதென்றே தெரியவில்லை. எனது கணவரிடமே நான் விவரத்தை சொன்னேன். யார் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்கள் என்று தெரியவில்லை பார்த்து கொள்ளலாம், பொறுமையாக இருங்கள் என எனது கணவரிடம் சொன்னேன். அன்று இரவு முழுவதும் நான் உறங்கவில்லை. அடுத்த நாள் மனோகரன் அவர்களுக்கு பணி ஓய்வு என்பதால் நான் அலுவலகத்திற்கு எப்போதும் போல சென்றேன். அங்கு அனைவரும் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டு போட்டோசை வைத்து கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். எனக்கு மிகவும் அசிங்கமாக இருந்தது. நான் அடுத்த நாள் அலுவலகத்திற்கு சென்ற போது*

*29.04.2022 அன்று என்னுடைய அலுவலக மின்னஞ்சல் முகவரியான dharshini@igcar.gov.in என்பதற்கு ஒரு மிரட்டல் மின்னஞ்சல் வந்திருந்தது. அதில் மனோகரன் என்பவரின் பணி ஓய்விற்கு நான் வரகூடாது என்றும், மீறி வந்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் குறிப்பிட்டு how is my revenge என்ற தலைப்பில் வந்திருந்தது. மனோகரன் அவரிடம் நான் மின்னஞ்சல் வந்த இரவு பேசும் போது அவர் காவல் நிலையத்தில் புகார் அளிப்பதாக சொன்னார். நான் பணியிலிருப்பதால் காவல் நிலைத்திற்கு புகார் அளிப்பதற்கு அனுமதி பெறவேண்டுமா என்று எனக்கு தெளிவு இல்லாததால் 29.04.2022 அன்று எனது CAO விற்கு கடிதம் மூலமாக ஒரு புகார் அளித்தேன். CAO அந்த புகாரை நாங்கள் விசாரிக்க முடியாது சைபர் க்ரைம் குற்றம் போல இருப்பதால் காவல் நிலையத்தில் புகார் கொடுங்கள் என்று கூறினார். மேலும் எனது புகாரை ICC க்கு பார்வட் செய்தார். ICC யில் 04.05.2022 அன்று விசாரணை நடத்தினார்கள். அந்த ICC யில் உள்ள சேர்மன் இவ்வழக்கின் எதிரி வனஜா.*

*பின்னர் நான் 01.07.2022 அன்று மேற்சொன்ன விவரங்களை குறிப்பிட்டு மறுபடியும் ஒரு புகார் அளித்தேன். மேற்சொன்ன நிகழ்வுகளினால் எனக்கு அலுவலகத்தில் மிகவும் அசிங்கமாக இருந்தது, வீட்டிலும் எனது கணவருடன் நிம்மதியாக இருக்க முடியவில்லை. இதனால் எனது கணவருக்கு இதயத்தில் கோளாறு ஏற்பட்டு மருத்துவமனை சிகிச்சையில் இருந்தார். சாட்சி மேற்கண்ட விவரங்களை கூறும் பொழுது அழுது கொண்டே கூறினார். சாட்சியிடம் அதசாஆ 2 ஆவணம் காண்பிக்கப்பட்டது. அந்த ஆவணம் தான் மெயிலில் வந்த அட்டாச்மெண்ட் மற்றும் மெயில் அனுப்பப்பட்ட முகவரிகள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் நான் மேற்படி விவரங்களை அவர்களிடம் கூறினேன்"*

என்ற மேற்படி நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தை போலிசார் விசாரணையின்போது கூறியுள்ளேனா என்றால் நான் மேற்படி கூறியுள்ளது போல போலிசாரிடம் கூறவில்லை. அவர்கள் கேட்கவும் இல்லை. இந்த வழக்கை வலுபடுத்தவேண்டும் என்பதற்காக நான் போலிசார் சொல்லி கொடுத்தனன் பேரில் போலிசாரிடம் கூறாத விவரங்களை நீதிமன்றத்தில் சாட்சியமாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல எதுவும் நடைபெறவில்லை என்றாலும் போலிசார்க்கு பவ்வயப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு**

**CC No. 845/2022**

அ.சா.1– மனோகரன் த/பெ விக்டர் ராஜ் நாள்–14.10.2025

எதிரி ஆஜர்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

27.04.2022 அன்று எங்கள் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் பாதுரி என்பவரின் இறப்பிற்கு நானும் எதிரி வனஜாவும் சென்று இருந்தோம் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் திரும்பி வருவதற்கு நள்ளிரவு ஆகிவிட்டது என்றால் சரியல்ல. 28.04.2022 அன்று நான் செய்யவேண்டிய பிரசன்ஸ்டேஷனை நான் மின்னஞ்சல் மூலம் அனுப்பிய தகவலை வைத்து எதிரியின் அலுவலக கம்யூட்டரில் தயார் செய்தார் என்றால் அது நான் செய்யவேண்டிய பிரசன்ஸ்டேஷன் இல்லை என் பணி ஒய்விற்காக மற்றபணியாளர்கள் செய்யவேண்டிய பிரசன்ஸ்டேஷன். நான் என் வாழ்வில் சந்தித்த முன்னேற்றங்கள் பற்றி பிரசன்ஸ்டேஷன் செய்வதற்காக மின்னஞ்சல் மூலமாக என்ன என்ன புகைப்படங்கள் அதில் சேர்க்கவேண்டும் என்று கூறியதன் அடிப்படையில் எதிரி ஒரு பிரசன்ஸ்டேஷன் தயார் செய்தார் என்றாலும் எனக்கு வேண்டிய காரணங்களுக்காக மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல ஏப்ரல் 2022 ல் எதிரி மட்டும் தான் அவரது வீட்டில் குடியிருந்து வந்தார் வேறு யாரும் குடியிருக்கவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. என் நண்பர் கோபி என்பவர் வெள்ளை கலரில் ஒரு கார் வைத்திருந்தார் என்றால் இல்லை, நான் கார் வைத்திருந்தேனா என்றால் ஆரஞ்ச் கலர் கார் வைத்திருந்தேன். நான் எதிரியின் கார் சும்மா நிற்கிறது என்று சொல்லி அவ்வப்போது அதை எடுத்துசெல்வது வழக்கம் என்று சொன்னால் சர்வீஸ்க்காக ஒருமுறை 3 வருடத்திற்கு முன்பு கார் கொடுத்தார். நான் எனது ஊரான விழுப்புரம் செல்வதற்கு எதிரியின் காரை அடிக்கடி பயன்படுத்தி வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. கோவிட் காலத்தில் எங்கள் அலுவலகத்தில் முக்கிய பணியாளர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டார்கள் என்றால் அனைத்து பணியாளர்களும் வரவேண்டும் என்று உத்தரவிட்டு இருந்தார்கள். கோவிட் காலங்களில் நான் எதிரியின் வீட்டில் இருந்து பணிபுரிந்து வந்தேன் என்றாலும் மேலும் அலுவலக அறிக்கைகளை எதிரியின் வீட்டிலிருந்து ஆன்லைன்

மூலமாக அனுப்பி வந்தேன் என்றால் தவறு. மேற்சொன்ன காரணத்தால் எதிரியின் கம்யூட்டரின் பாஸ்வோட் எனக்கு நன்கு பரிட்சியம் என்றால் முற்றிலும் தவறு. இந்த வழக்கு சம்பந்தமாக என்னுடைய கைப்பேசி மற்றும் கம்யூட்டரை கைப்பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய கைப்பேசி மற்றும் கம்யூட்டரை ஆய்விற்கு போலிசாரிடம் கொடுத்து இருந்தால் நான் எதிரிக்கு அனுப்பிய மின்னஞ்சல் விவரங்கள் தெரிய வரும் என்பதால் அதை கொடுக்கவில்லை என்றால் போலிசார் என்னிடம் கேட்கவே இல்லை. 14.04.2022 அன்று எதிரி அவர் ஊர்க்கு செல்வதற்கு காரில் அழைத்து சென்று சென்ட்ரல் ரயில் நிலையத்தில் அவரை விட்டேன் என்றால் இல்லை நான் கார் ஒட்டவில்லை. 18.04.2022 முதல் 30.04.2022 வரை எதிரியின் வீட்டின் சாவி என்னிடம் தான் இருந்தது அதை நான் 30.04.2022 அன்று என் உறவினர்கள் முன்னிலையில் அவரது இல்லத்திற்கு சென்று எதிரியிடம் ஒப்படைத்தேன் என்றால் தவறு. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ளவர்கள் என் உறவினர்கள் என்றால் சரிதான். அந்த புகைப்படத்தில் உள்ள இடம் வனஜாவின் வீட்டின் கேம்பேஸ் என்றால் சரிதான். **அந்த புகைப்படம் எதசா 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அரசு தரப்பு வழக்கறிஞர் இந்திய சான்று சட்டம் பிரிவு 65 பி ன் கீழ் கொடுக்கவில்லை என்று ஆட்சேபனை தெரிவிக்கிறார். எதசா 1 புகைப்படம் என்னுடைய போனில் எடுக்கப்பட்ட புகைப்படம் வனஜாவின் தொலைப்பேசிக்கு என்னால் 16.05.2022 அன்று அனுப்பிவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் 14.12.2019 அன்று வனஜா வீட்டில் என்னால் செல்பி மூலம் எடுக்கப்பட்ட புகைப்படம் வனஜாவின் தொலைப்பேசிக்கு நான் அனுப்பியது என்று சொன்னால் சரியல்ல. 30.04.2022 ற்கு பிறகு என் பணி ஒய்வு காலத்தில் மாற்று பணிக்கு செல்வதற்காக எதிரியிடம் என்னுடைய ரெஸ்யூஜ தயார் செய்ய சொன்னேன் என்றால் தவறு. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை 27.05.2022 அன்று தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 05.05.2022 அன்று காவல் துறையினர் எப்போது வேண்டும் என்றாலும் எதிரியை கைது செய்யலாம் என மிரட்டி வந்தேன் என்றால் சரியல்ல. கல்பாக்கம் குடியிருப்பில் சிசிடிவி கேமிரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதிலுள்ள விவரங்கள் ஒரு மாதத்திற்கு பிறகு அழிக்கப்படும் என்று சொன்னால் அதற்கு பொருப்பு வனஜா தான் அதைப்பற்றி எனக்கு தெரியாது. உயர்

அதிகாரி என்ற முறையில் மேற்படி எனக்கு விவரங்கள் தெரியும் என்றால் எனக்கு தெரியாது. 27.05.2022 ற்கு முன்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தால் வனஜாவின் கேம்பசில் யார்யார் சென்று வந்தார்கள் என்ற விவரம் சிசிடிவி கேமிராவில் பதிவு ஆகியிருக்கும் என்பதால் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி மேற்சொன்ன தேதியில் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் போலிசாரிடம் பணி ஓய்விற்கு பின்பு எனக்கு எந்த செல்வாக்கும் இல்லை. எனது நெருங்கிய நண்பர் சிபிசிஐடியில் பணிபுரிந்து வருகிறார் என்றால் நிறைய நபர்கள் பணிபுரிகிறார்கள். 30.05.2022 அன்று நானும் கோபியும் வனஜாவின் இல்லத்திற்கு சென்றோம் என்றால் சரி. அதற்காக ஆதாரங்கள் உள்ளது நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வனஜா சைபர்கிரைம் காவல் நிலையத்திற்கு தனியாக செல்லுமாறும் நான் உதவி செய்கிறேன் என்றும் கோபி முன்னிலையில் வாக்குறுதி அளித்தேன் என்றால் சரியல்ல. எதிரியுடன் நான் நன்றாக பழகவும் செய்வேன் அதே சமயத்தில் அவரை வளர விடாமலும் செய்வேன் என்றால் தவறு. என்னுடைய காலத்தில் எதிரியின் பெயரை பணிஉயர்விற்கு பரிந்துரை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பணிஓய்வு பெற்றபின்பு எதிரிக்கு பணிஉயர்வு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தின்படி எதிரிக்கு பணிஉயர்வு கிடைத்துவிட்டது என்றாலும் இன்றைய தேதி வரையில் அவரை பணியில் சேரவிடாமல் தடுத்துவருகிறேன் என்றால் சரியல்ல. எதிரி ஐசிசியில் சேர்மேனாக பணிபுரிந்தபோது சியாமளன் என்ற லேப்டெக்னிசியன் மருத்துவரிடம் தவறாக நடந்துகொண்டார் என்ற புகாரினை விசாரித்து அவரை கல்பாக்கத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று எதிரியின் உத்தரவினை நிறுத்தி நான் அவர்க்கு மூன்று இன்கிரிமெண்ட் நிறுத்தினால் போதும் என உத்தரவிட்டேன் என்றால் சரியல்ல. கரோலின் என்ற என் உறவினரிடம் ஒருவர் தவறாக நடந்து கொண்டதற்கு எதிரியிடம் ஒரு புகார் தயார் செய்து கொடுத்தேன் என்றால் இளங்கோவன் மீது பலபுகார்கள் வந்ததால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என் உறவினர் என்பதால் இல்லை. எனக்கு 3 மெயில்ஐடிகள் உள்ளது என்றால் இல்லை 2 தான் இருந்தது. nalinmerlin@gmail.com, mano@igcar.gov.in என்பது என்னுடைய மின்னஞ்சல் என்றால் சரிதான். nalinmerlin@yahoo.co.in என்பது என்னுடைய மின்னஞ்சல் என்றால் சரியல்ல. மேற்படி மின்னஞ்சல்களை தவிர மேலும்

மின்னஞ்சலைகளை நான் பயன்படுத்தி வருகிறேன் தற்போது இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பணிகாலத்தில் உயர் அதிகாரிகள் மற்றும் கீழ்நிலை அதிகாரிகளை நான் ஆன்லைன் வாயிலாக தான் நான் தொடர்பு கொள்வேன் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தபோது

*"இதனை தொடர்ந்து எனது மற்ற மேலதிகாரிகள் அவர்களுக்கும் மின்னஞ்சல் காப்பி சென்றதால் எனக்கு போன் மூலம் தொடர்பு கொள்ள ஆரம்பித்தார்கள். அன்றைய தினம் இரவே நான், எனது மகன், மருமகள் ஆகியோர்கள் எனக்கு ஆன்லைனில் பரீட்சையமில்லாததால் சேர்ந்து ஆன்லைன் மூலமாக போலிஸ் கம்ப்ளைன்ட் பதிவு செய்தோம். பின்னர் 03.05.2022 அன்று என்னை காவல் நிலையத்திலிருந்து நான் அளித்த புகார் சம்மந்தமாக விசாரணைக்கு அழைத்தார்கள். நான் 04.05.2022 அன்று காவல் நிலையத்திற்கு சென்றேன். என்னிடம் என்ன நடந்தது என்று விசாரணை செய்தார்கள். நான் என்னுடைய தனிப்பட்ட மெயில் ஐடியிலிருந்து nalinmerlin@gmail.com அவர்கள் கூறிய CCB காவல் நிலைய மெயில் ஐடிக்கு மேற்சொன்ன மெயிலை பார்வேர்ட் செய்தேன். தர்ஷினி என்பவர் 28.04.2022 அன்று எனக்கு அவருக்கு வந்த மெயிலை எனக்கு மேற்சொன்ன மின்னஞ்சலுக்கு அனுப்பியிருந்தார். போலிசார் என்னிடம் அந்த மெயிலில் உள்ள போட்டோக்களில்உள்ள நபர்களை குறித்து விசாரித்தார்கள். அதில் ஒரு போட்டோ என்னுடையது என்றும், மற்றொரு போட்டோ திருமதி. தர்ஷினி தனியாக இருக்கும் போட்டோ என்றும், மற்ற 3 போட்டோக்கள் பல சந்தர்ப்பங்களில் பல நபர்களுடன் நானும், தர்ஷினியும் சேர்ந்து எடுத்த போட்டோக்களில் இருந்து எங்கள் இருவரை மட்டும் கட் செய்து எடுத்திருந்த போட்டோவும் இருப்பதாக காவல் துறையினரிடம் தெரிவித்தேன். நான் எனக்கு ஏற்பட்ட மன உலைச்சல் மற்றும் எனக்கு ஏற்பட்ட பிரச்சனை குறித்து காவல் துறையினரிடம் தெரிவித்தேன்"*

என்ற மேற்படி விவரத்தை போலிசாரிடம் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் அவ்வாறு போலிசார் விசாரணையில் கூறவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Chengalpattu.